அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்
றொம்மன் வளாகம்

# ஓவியம் வரையும்போது மாணவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்

1. தரப்பட்டுள்ள தாள் முழுவதுமாகப் பாவிக்கப்படல் வேண்டும். தாள் முழுவதும் ஓவியத்தைப் பரவி வரைதல் வேண்டும்.

2. வரையப்படும் உருவங்கள் அல்லது பொருட்கள் ஒன்றுக்கொன்று விகிதாசார அடிப்படையில் ஒத்திருத்தல் வேண்டும். எ +கா: **தென்னைமரம், மனிதர்கள்.**

3. வர்ணம் தீட்டும்போது, வரையப்படும் உருவங்கள், பொருட்களுக்கு பொருத்தமான வர்ணங்களைக் பாவித்தல் வேண்டும். எ +கா: **இயற்கைக் காட்சி ( புதுமையான கருத்தோவியங்கள் விதிவிலக்கு)**

4. வர்ணம் தீட்டும்போது சீராக வர்ணம் தீட்டல் வேண்டும்.(வர்ண எழுதுகோல்கள்) ஒரே திசையில், நேராக. வெவ்வேறு திசைகளில் இருந்து பற்பல கோணங்களில் தீட்டுவது தவிர்க்கப்படல் வேண்டும்.



5. இயற்கைக்காட்சி வரையும்போது முன்னால் வரையப்பட்டிருக்கும் உருவங்கள் பெரியதாகவும், தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.(அழுத்தமாக வர்ணம் தீட்டுதல்), தூரத்தில் உள்ள பொருட்கள் மங்கலாக வர்ணம் தீட்டப்படல் வேண்டும்.(மென்மையாக, அழுத்தம் குறைத்து தீட்டுதல்).

6. மிகத் தெளிவாக தெரியவேண்டிய உருவங்களுக்கு (பொருட்களுக்கு) விளிம்பை கருமைப்படுத்தி காட்டுதல் மூலம் தெளிவாக்கலாம்.

7. வர்ணம் தீட்டும்போது தாள் முழுவதும் வர்ணம் பரவித் தீட்டப்படல் வேண்டும். வெண்மையான பகுதிகளாக தாள் இருத்தல் கூடாது. வெண்மையாக இருக்கவேண்டிய தேவை இருப்பின், வேறு மெலிதான(வெளிர்நீலம்) வர்ணத்துடன் வெள்ளை வர்ணத்தை சேர்த்து நிழற்படுத்தி வர்ணம் தீட்டவேண்டும்.

## ஓவியம் வரையும்போது மாணவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்

2. சிறிய உருவங்களைப் பெரிதாக்கும் முறை:

முறை-1: தரப்பட்ட படத்தின்மீது சதுரம் ஒன்று வரைந்து அதனை சிறு சதுரங்களாகப் பிரித்தல். பின்பு தேவையான அளவுக்கு (மடங்கிற்கு) சதுரத்தை பெரிதாக்கி அதனுள் படத்தை வரைதல்.




முறை-2: தரப்பட்ட படத்தின் நடுவில் நிலைக்குத்தாக கோடு வரைந்து அதை சிறு பகுதிகளாக சமமாகப் பிரித்தல், பின் குறுக்குவாட்டாக பிரிக்கப்பட்ட புள்ளிகளூடாக கோடுகளை வரைந்து, அக்கோடுகளை சமச்சீர்க் கோட்டின் இருபுறமும தரப்பட்ட படத்தின் விளிம்புகளை தொடும்படியாக நீட்டல். பின்னர் வேண்டிய மடங்கிற்கு பெருப்பித்து இதே முறையில் படத்தை வரையலாம்.

